சாட்சிய வாக்குமூலம்
(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)
முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்
அமர்வு வழக்கு எண்.102/2017

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05–ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.–6வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. 1,2 எதிரிகள் ஆஜர்.3ம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை அவர் கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனு அனுமதிக்கப்பட்டது.அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | கோமதி | மாவட்டம் | : |
| க/பெ.பெயர் | : | சரவணவெங்கட்ராமன் | தொழில் | : |
| கிராமம் | : | | வயது | : |
| வட்டம் | : | | | |

<u>மனுவின் பெயரில் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. இறந்துபோன அருண்ராம் என் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். 2ம் எதிரி என் கணவருடைய உடன்பிறந்த மூத்த சகோதரி என்றால் சரிதான். 1ம் எதிரி 2ம் எதிரியின் கணவர். 3ம் எதிரி 1 மற்றும் 2 எதிரியின் மகள் ஆவார். என் சகோதரர் இறப்பிற்கு சென்று இருந்தேனா என்றால் தகவல் தெரிந்தவுடன் சகோதரர் இறப்பிற்க்கு சென்றேன். அன்றைய தினம் என்னுடைய சகோதரர் தற்கொலை செய்தற்கு காரணம் 3ம் எதிரி என்னுடைய சகோதரரை காதலித்து, ஏமாற்றியது தான் காரணம் என்று நான் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அன்றை தினம் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. விடியற்காலை 3 மணி அளவில் தான் வந்தேன்.
2. நான் மருத்துவர் என்கிற அடிப்படையில் தற்கொலைக்கான காரணம் குறித்து எனக்கு தெரிந்த விபரங்களை போலீசாரிடம் சொல்லவேண்டும் என்கிற விபரத்தை எனக்கு தெரியும் என்றால் சரிதான். 3ம் எதிரி காதலித்து ஏமாற்றியதாக பின்னிட்டு அ.சா.1 அறிவுருத்தலின் பெயரில் பொய்யாக வாக்குமூலம் அளித்த காரணத்தினால் தான் என் சகோதரர் இறந்த தினத்தன்று போலீசாரிடம் எந்த வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல.
3. அருண்ராமும் என்னுடைய நாத்தனார் மகளான 3ம் எதிரி மஞ்சுவும்

சுமார் 8 வருடங்களுக்கு மேலாக உயிருக்கு உயிராக காதலித்து வந்தார்கள் என்றும் 3ம் எதிரி உறவினர் என்பதால் அவரை பெண் கேட்கலாம் என்று என் தாயார் , என் தந்தை என்னிடம் கூறினார் என்றும் மேலும் என் தாய், தந்தையார் திண்டுக்கல்லில் உள்ள என் வீட்டிற்கு வந்திருந்தார்கள் என்றும் என் தந்தை என் வீட்டிலிருந்து அழைபேசிமூலம் என் நாத்தனாருக்கு தொடர்பு கொண்டு பெண் பார்த்து பேச வருகிறோம் என்று கூறினார் என்றும் அதற்கு அவர் சம்மதம் தெரிவித்தார் என்றும் மேலும் என் வீட்டிலிருந்து காலிகட்டிற்கு கார் மூலம் என் தாய், தந்தையார் நாத்தனார் வீட்டிற்கு சென்றார்கள்என்றும் மேற்கண்ட காலிகட்டில் உள்ள நாத்தனார் வீட்டிற்கு சென்று பார்த்த போது வீடு பூட்டி இருந்தது என்றும் உடனே என் தந்தை அவர்களின் வீட்டின் முன்பே இருந்து அழைபேசி மூலம் 1ம் எதிரியான சிவராமகிருஷ்ணனை தொடர்பு கொண்டார் என்றும் ஆனால் சிவராமகிருஷ்ணன் அழைபேசியை எடுக்கவில்லை என்றும்அதனால் என் தாய், தந்தையர் அவர்களின் வீட்டு முன்பே அரை மணி நேரம் காத்திருந்தனர் என்றும் ஆனால் எவ்வித தொடர்பும் 1,2 எதிரிகளிடம் இருந்து வரவில்லை என்பதால் அங்கு இருந்து என் தாய், தந்தையர் நடு இரவில் திண்டுக்கலில் உள்ள என் வீட்டிற்கு திரும்பினர் என்றும் பின்பு மேற்கண்ட சங்கதிகளை என் தாய், தந்தையர் என் சகோதரர்அருண்ராமுக்கு தகவல் சொன்னார் என்றும் அந்த தகவலை கேட்டு என் சகோதரர் மனம் உடைந்தார் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. மேலும் சிஅதன் பிறகும் 3ம் எதிரி என் தம்பியிடம் தொடர்ந்து பேசி கொண்டு இருந்தார் என்றும் திடீர் என்று ஒருநாள் 3ம் எதிரி தனக்கு வேறு ஒரு மாப்பிள்ளை பார்த்து விட்டார்கள் என்பதால் என் தம்பியை திருமணம் செய்து கொள்ளமாட்டேன் என்று கூறினார் என்றும் அதனால் என் தம்பி மனம் உடைந்து காணப்பட்டார் என்றும் 8 வருடங்களாக என் தம்பியை காதலித்து 3ம் எதிரி ஏமாற்றிவிட்டார் என்று என் தம்பி புலம்பிகொண்டு இருந்தார் என்றும் மேலும் 18.06.2014 3ம் எதிரிக்கு திருமணம் உறுதி செய்யப்பட்டது என்றும் அதன் பின்பு என் தாய், தந்தையர் 15.06.2014 அன்று என் தம்பியை சென்னையில் இருந்து ஈரோட்டிற்கு வர சொன்னார்கள் என்றும் 28.06.2014 அன்று என் தாய், தந்தையர் அருண்ராம் அறையை சுத்தம் செய்தவதற்காக சென்றார்கள் என்றும் அங்கு சுத்தம் செய்யும் போது ஒரு புத்தகத்தில் அருண்ராம் எழுதி வைத்திருந்த தற்கொலை கடிதம் இருந்தது என்று என் தாய், தந்தையர் அந்த கடிதத்தை எடுத்து வந்து என்னிடம் காட்டினார்கள் என்றும் மேற்படி அந்த கடிதத்தை படித்து பார்த்தேன் என்றும் என் தம்பி தற்கொலைக்கு

காரணமான எதிரிகள் தான் என்று எழுதிவைத்திருந்தார் என்றும் போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

5. என்னுடைய கணவர் 1,2 எதிரிகளிடம் 3வது எதிரியை தன்னுடைய மைத்துனர் இறந்தபோன அருண்ராமை 3ம் எதிரிக்கு திருமணம் செய்து கொடுக்கலாம் என்று கேட்டபோது 1,2 எதிரிகள் 3வது எதிரியிடன் கலந்து ஆலோசித்து உறவில் பெண் கேட்கவேண்டாம் என்பதாலும் 3ம் எதிரி மேற்கொண்டு படிக்க விரும்பியதாலும் 1,2 எதிரிகள் 3வது எதிரியை பெண்கொடுக்க மறுத்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல.

6. 3ம் எதிரியை அருண்ராமிற்க்கு திருமணம் செய்து வைக்க என் கணவர் எப்போதும் 2ம் எதிரியை கேட்டாரா என்றால் கேட்கவில்லை. நான் எனது கணவரிடம் 3ம் எதிரியும், அருண்ராமும் காதலிப்பதாகவும் அது குறித்து 2ம் எதிரியான அக்காவிடம் பெண் கேட்க சொன்னேனா என்றால் சரிதான். என் கணவர் பெண் கேட்கவில்லை. மேலும் என் கணவர் நான் சொல்லி பெண் ஏன் கேட்கவில்லை என்றால் 3ம் எதிரி மற்றும் அருண்ராம் எப்போதும் காதலிக்கவில்லை என்பதால்தான் என் கணவர் பெண் கேட்கவில்லை என்றால் சரியல்ல.

7. மேற்கண்ட காரணத்தில்தான் என் கணவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்தால் வழக்கின் உண்மை தெரிந்துவிடும் என்பதால் தான் என் கணவரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் அவராக 3ம் எதிரியை இறந்துபோன அருண்ராமிற்கு திருமணம் செய்து வைக்கலாமா என்று 1,2 எதிரிகளை 2009ம் வருடமே கேட்டார் என்றும் அதற்கு மறுத்துவிட்டதான் காரணமாக என்னுடைய தகப்பனார், தாயார் மற்றும் என் சகோதரர் எதிரிகள் குடும்பத்தோடு பேசுவதையே நிறுத்திவிட்டனர் என்றால் சரியல்ல.

8. என்னுடைய தாய், தந்தையர் 3ம் எதிரியை பெண் கேட்க காலிகட் சென்றதும் அங்கு அவர்கள் வீட்டை பூட்டிவிட்டு சென்றுவிட்டதாகவும் வழக்கை ருசிபடுத்துவதற்காக அ.சா.1ன் ஆலோசனை பெயரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் எதிரியும் அருண்ராமும் திருமணம் செய்வதற்கு 1,2 எதிரிகள் மறுத்துவிட்டபோதிலும் அவர்கள் காதலிப்பது தவறு என்று 3ம் எதிரிக்கோ அல்லது என்னுடைய சகோதரர் அருண்ராமிற்கோ அறிவுரை சொன்னேனா என்றால் 3ம் எதிரிக்கு அறிவுரை சொல்லவில்லை மேலும் என் சகோதரருக்கு அறிவுரை சொன்னேன்.

9. 3ம் எதிரியை பெண் கொடுக்க மறுத்த பிறகும் அருண்ராமும், 3ம் எதிரியும் பேசிக்கொண்டு இருக்கிறார்கள் என்கிற விபரம் மே மாதம் தான்

எனக்கு தெரியும். 3ம் எதிரியை பெண் கொடுக்க மறுத்த பிறகும் அருண்ராமும், 3ம் எதிரியும் பேசிக்கொண்டு இருக்கிறார்கள் என்கிற விபரத்தை என் தாய், தந்தையரிடம் சொல்லவில்லை. பெண் கொடுக்க மறுத்து எனது சகோதரர் 3ம் எதிரியுடன் பழகிகொண்டுயிருக்கிறார் என்பதை 1,2 எதிரிகளிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். எந்த தேதி என்று தெரியவில்லை. நேரடியாக சொல்லவில்லை ஆனால் எதிரிகளின் உறவினர்கள் மூலம் தெரியபடுத்தினோம். எதிரிகள் அருண்ராமை திருமணம் செய்ய மறுத்துவிட்டபிறகு இறந்துபோன அருண்ராமிடம் எப்போதும் பேசவோ, தொடர்பு கொள்ளவில்லை என்பதால் தான் அது குறித்து நான் யாரிடமும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக வேண்டி அ.சா.1 ஆலோசனை படி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. 28.06.2014 அன்று என் தாய், தந்தையர் அருண்ராம் அறை சுத்தம் செய்ய சென்ற போது தற்கொலை கடிதம் எழுதிவைத்திருந்ததாகவும், அதை தாய், தந்தையர் என்னிடம் காட்டியதகாவும் அதை நான் படித்து பார்த்ததாகவும் என் தம்பி தற்கொலைக்கு எதிரிகள் தான் காரணம் என்று வழக்கிற்காக பொய்யாக சொக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தம்பி எந்தவிதமான தற்கொலை கடிதமும் எழுதிவைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னை சாட்சியாக விசாரிக்கவேண்டும் என்பதற்கு போலீசார் எந்தவித அழைப்பாணையும் கொடுக்கவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

11. வழக்கை ருசுபடுத்தவேண்டும் என்பதற்காக பின்னிட்டு தகப்பனார் ஆலோசனை பெயரில் பொய்யான சங்கதிகளை கூறுகிறீர்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் மூவரும் என்னுடைய சகோதரர் இறப்பிற்கு காரணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சகோதரர் காதல் தோல்வியால் இறக்கவில்லை சென்னையில் நடத்தி வந்த மருத்துவமனையை மூடிவிட்டு வரும்படி என் தாய்,தந்தையர் கண்டிப்புடன் சொன்னதன் காரணமாகதான் என் சகோதரர் தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: – இல்லை